உ

# இந்து சமய அறநிலையத்துறை

# சென்னை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்

315, தங்கசாலை தெரு, சென்னை–3.

**வேலைவாய்ப்பு விண்ணப்பம் கோரும் மறு விளம்பர அறிவிப்பு 25–10–2022**

சென்னை–3, தங்கசாலை தெரு, சென்னை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு தக்கார் தீர்மானத்தின்படி பணியாளர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ள இந்து மதத்தை சார்ந்த நபர்களிடமிருந்து 26–11–2022– ம் தேதி மாலை 5–45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியிடம் | பணியிடங்கள் எண்ணிக்கை | சம்பள விகிதம் 01.01.2019–ல் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | ஓதுவார் | 1 | ரூ.12600/– (ஊதிய அட்டவணை எண்.13) | 1.தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. சமய நிறுவனங்கள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது ஏனைய யாதொரு நிறுவனங்கள் நடத்தும் மூன்றாண்டு பாடப்பிரிவை முடித்ததற்கான தேவாரப்பள்ளி வழங்குகின்ற சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் |
| 2. | பரிச்சாரகர் | 1 | ரூ.13200/– (ஊதிய அட்டவணை எண்.14) | 1.தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். 2. கோயிலின் பழக்க வழக்கத்திற்கேற்ப நைவேத்தியம் மற்றும் பிரசாதம் தயாரிக்கத் தெரிந்திருக்க வேண்டும் 3. பூஜை மற்றும் சடங்குகளை நடத்துவதற்கான வழக்கமான நடைமுறைகளை அறிந்திருக்க வேண்டும். |
| 3. | காவலர் | 1 | ரூ.11600/– (ஊதிய அட்டவணை எண்.12) | தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். |
| 4. | இரவு காவலர் | 1 | ரூ.11600/– (ஊதிய அட்டவணை எண்.12) | தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். |
| 5. | திருவலகு | 1 | ரூ.10000/– (ஊதிய அட்டவணை எண்.10) | தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். |
| 6. | கால் நடை பராமரிப்பாளர் | 1 | ரூ.11600/– (ஊதிய அட்டவணை எண்.12) | தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். |

2022 ஜூலை 1 அன்று 18 வயது பூர்த்தியானவராகவும், 45 வயது பூர்த்தியடையாதவராகவும் இருத்தல் வேண்டும். இதர விபரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் வந்து தெரிந்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் வந்து ரூ.100/– ஐ செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும். விண்ணப்பங்களை 27.10.2022 முதல் 26.11.2022 மாலை 5.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளலாம். படிவங்களை பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களை அரசு பதிவு பெற்ற அலுவலரின் சான்றொப்பத்துடன் இணைத்து விண்ணப்பங்களை செயல் அலுவலர், சென்னை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், சென்னை–3 என்ற முகவரியில் சேர்ப்பிக்க வேண்டும். 26.11.2022 மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும், தேவையான விபரங்கள் மற்றும் இணைப்புகளுடன் வரப்பெறாத விண்ணப்பங்களும், வேறு வகையில் உருவாக்கப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

கே.எஸ். நற்சோணை
செயல் அலுவலர்

பெ.க. கவெனிதா
தக்கார் / துணை ஆணையர்

## நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரர் 01-07-2022 அன்று 18 வயதைப் பூர்த்தியடைந்துள்ளவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும், உடல் ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

03. திருக்கோயில்களில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

04. திருக்கோயிலுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் / வழக்குத் தொடுத்தவர்கள் / நிலுவைத் தொகை வைத்திருப்பவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

05. விண்ணப்பதாரர் காவல்துறையில் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவராகவோ, குற்றவாளி என அறிவிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

06. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எற்றுக் கொள்ளப்படும்.

07. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறையின் சட்டவிதிகளின்படியும் நேர்முகத் தேர்வு நடைபெறும்.

08. தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நேர்முகத் தேர்விற்கான அழைப்பாணை தனியே பின்னர் அனுப்பப்படும்.

09. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்பவர்களுக்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.

10. நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் நபர் / நபர்களை எவ்வித காரணமும் கூறாது நிராகரிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

11. தேர்வு செய்யப்படும் நபர்கள் போலியான சான்றிதழ்கள், ஆவணங்கள் சமர்ப்பித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யப்படுவர். மேலும் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

12. விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்தில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

13. நிர்வாக காரணங்களுக்கான மேற்கண்ட வேலைவாய்ப்பு அறிவிப்பினை மாற்றம் செய்திட திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

14. இணைக்கப்பட வேண்டிய சான்றிடப்பட்ட நகல்கள்
1. வயது 2. கல்வித் தகுதி 3. மதம் மற்றும் சாதி சான்றிதழ் 4. விண்ணப்பிக்கும் பணியிடத்திற்கான சிறப்பு தகுதிச் சான்று 5. முன் அனுபவச் சான்றிதழ் 6. நன்னடத்தை சான்று 7. விண்ணப்ப படிவம் ரசீது நகல்.

15. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பணி நியமன ஆணை வழங்கப்பட்டதும் பணியில் சேரும் முன் அரசு பதிவு பெற்ற மருத்துவரிடம் உடற்தகுதி சான்று பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கீழ்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்**

**செயல் அலுவலர்**
**சென்னை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்,**
**315, தங்கசாலை தெரு, சென்னை – 600 003.**

கே.எஸ். நற்சோணை
செயல் அலுவலர்

பெ.க. கவெனிதா
தக்கார் / துணை ஆணையர்

# இந்து சமய அறநிலையத்துறை
# சென்னை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்

315, தங்கசாலை தெரு, சென்னை - 3.

## வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் மறு விளம்பர அறிவிப்பு 25.10.2022

**சென்னை - 3, தங்கசாலை தெரு, சென்னை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் ஓதுவார், பரிச்சாரகர், காவலர், இரவு காவலர், திருவலகு, கால்நடை பராமரிப்பாளர் ஆகிய காலிப்பணியிடங்களுக்கு இந்து மதத்தை சார்ந்த 18 முதல் 45 வயதிற்குட்பட்ட தகுதியானவர்களை நேர்காணல் மூலம் தேர்வு செய்வதற்கு 26.11.2022-ம் தேதி மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதர விபரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்**

செ.ம.தொ.இ / 1082 / வரைகலை / 2022

**- திருக்கோயில் நிர்வாகம்**

**சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்**